**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No. 171/2012**
**Prosecution Witness P.W. 8**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. முனியாண்டி | Caste | : |
| Father's name | : திரு. கந்தசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 24.03.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் தமிழ்நாடு அரசுப்போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2010ம் ஆண்டு உசிலம்பட்டி அரசுப்போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியில் இருந்த போது கடந்த 14.07.2010 அன்று நான் பதிவெண் 1528 என்ற அரசுப்பேருந்தில் பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்து உசிலம்பட்டி செல்வதற்காக பணி நியமிக்கப்பட்டிருந்தேன். அந்த பேருந்தில் ஜெயச்சந்திரன் என்பவர் ஓட்டுனராக பணியில் இருந்தார். காலை 9.00 மணிக்கு பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் 10 வண்டிகள் அரசுப் பேருந்துகளை உசிலம்பட்டி செல்வதற்கு பந்து என்பதால் ஒன்றாக வண்டி எடுக்கப்பட்டு வந்து கொண்டிருந்தோம், பயணிகள் ஏறினார்கள். எங்களுடன் எங்கள் அலுவலக உயரதிகாரிகளும் வந்தார்கள். செக்கணூரணி காவல்நிலையம் அருகே நாஙகள் வந்த போது திடீரென்று டம் என்று சத்தம் கேட்டது. நான் வண்டியில் டிக்கெட் போட்டு கொண்டு பின்னாடி நின்று கொண்டிருந்தேன். வண்டியை நிறுத்தி பார்த்த போது, நான் பணி செய்த பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைக்கப்பட்டு இருந்தது. பயணிகளுக்கு எந்த காயமும் இல்லை. எங்களுடன் வந்த சுமார் பத்து வண்டிகளுக்கும் சேதம் ஏற்பட்டது. கூட்டமாக இருந்தவர்கள் கல் எடுத்து வீசி அதனால் எங்கள் வண்டிகளுக்கு சேதம். இதுசம்பந்தமாக எங்களுடன் வந்த உயரதிகாரிகள் செக்காணூரணி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இதுகுறித்து போலிசார் எங்களை

விசாரித்தார்கள். அப்போது 10, 30 பேர்கள் கூட்டமாக இருந்தார்கள். மேற்படி நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் எதிரிகள் அவர்கள் தான் என்று தெரியவில்லை. வண்டியின் சேதமதிப்பு எனக்கு சரியாக தெரியவில்லை.

**<u>குறுக்குவிசாரணை</u>**

பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்து உசிலம்பட்டிக்கு நான் சென்ற பேருந்து மட்டும் தான் சென்றது என்றால் சரிதான். பொதவாக நான் எங்கு கிளம்பினாலும் கிளம்பும் இடத்தில் தினநாட்குறிப்பு ஒன்று இருக்கும் என்றாலும், அதில் எங்கு செல்கிறேன், எத்தனை மணிக்கு என்ற கையொப்பம் இட்டுவிட்டு செல்ல வேண்டும் என்றால் சரிதான். அந்த தினநாட்குறிப்பை போலிஸ் அதிகாரிகளிடம் விசாரணைக்கு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் சொன்ன உயரதிகாரிளகள் எனது பேருந்தில் வரவில்லை, வேறு ஏதோ ஒரு பேருந்தில் வந்ததாக கேள்விப்பட்டேன். சம்பவம் நடந்தது செக்காணூரணி காவல்நிலயை வாசல் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எங்களது பேருந்து மட்டும் தான் இருந்தது என்றால் சரிதான். அப்போது மணி சுமார் 9.30 இருக்கும். சம்பவம் நடந்தவுடன் பேருந்தை நிறுத்திவிட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் பேரில் தான் இந்த வழக்கின் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சுமார் 9.45 மணிக்கு எனது பேருந்தை எடுத்துக் கொண்டு உசிலம்பட்டியில் உள்ள டிப்போவிற்கு எடுத்து சென்றுவிட்டேன். சம்பவம் நடந்ததில் இருந்து இன்று வரை என்னை காவல்துறையினர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும், எனது புகாரிலும் யார் என்றே தெரியாத நபர் தான் கல் எடுத்து எரிந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பேருந்தை விட்டு இறங்கும் போது 10, 30 நபர்கள் இருந்ததை தான் நான் கூட்டமாக இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எங்களது பேருந்திலும் சுமார் 20 பேருக்கு மேல் பயணித்தார்கள். அந்த 20 நபர்களின் பெயர்களையும், முகவரியையும் எழுதிக் கொண்டு அவர்களையும் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி எதிரிகளை யார் என்றே எனக்கு தெரியாது. இந்த வழக்கில் குறிப்பிட்ட இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், வேறு எங்கோ நடந்த சம்பவத்தை வேண்டும்

என்றே செக்காணூரணி காவல்நிலையம் முன்பாக நடந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No. 171/2012**
**Prosecution Witness P.W. 9**
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சுப்புராஜ் | Caste | : |
| Father's name | : திரு. மாசாணம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 24.03.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை புறநகர் தமிழ்நாடு அரசுப்போக்குவரத்து கழக கிளையில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2010 அன்று காலை சுமார் 5.05 மணிக்கு ஆரப்பாளையத்தில் இருந்து கம்பம் செல்வதற்கு பதிவெண் TN 58 N 1244 ஐ எடுத்து செக்காணூரணி சிவன்கோவில் அருகே எங்கள் பேருந்து செல்லும் போது, காலை 5.30 மணிக்கு கண்ணாடியில் கல் விழுந்து பேருந்து சேதம் ஏற்பட்டது. வண்டியின் முன்பக்க கண்ணாடி சேதம் அடைந்துவிட்டது. பேருந்தில் பயணிகளுக்கும், எனக்கும் எந்த காயமும் இல்லை. நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

நான் 14.07.2010 மணிக்கு ஆரப்பாளையத்தில் இருந்து காலை சுமார் 5.05 மணிக்கு புறப்பட்டு கம்பம் செல்வதற்காக சென்றேன் என்றால் சரிதான். நான் சென்ன சிவன் கோவில் என்பது செக்காணூரணியில் இருந்து சுமார் 1/2 கி.மீ தூரம் இருக்கும். அந்த சிவன் கோவில் அருகே எந்த வீடுகளும் இருக்காது என்றும், வெறும் காடு போல் தான் இருக்கும் என்றால் சரிதான். மேற்சொன்ன சம்பவம் அதி காலை 5.30 மணிக்கே நடந்தது. காலை இருட்டு என்பதால் எனது பேருந்தில் யார் கல் எடுத்து எரிந்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். பின்னர் செக்காணூரணி காவல்நிலையத்தில அன்று காலை 6.00 மணிக்கே நான் புகார் கொடுத்துவிட்டேன். அன்றைய தினம் நான் புகார் கொடுத்து விட்டு நான்

பேருந்தை எடுத்து கொண்டு மதுரை பைபாசிற்கு சென்றுவிட்டேன். அவ்வாறு நான் மதுரை பைபாசிற்கு வந்தது சுமார் 7.00 மணி இருக்கும். மேற்படி விபரங்களை தினநாட்குறிப்பில் காலையில் பேருந்தில் கல் எடுத்து எரிந்தது, நான் புகார் கொடுத்தது போன்றஅனைத்தும எழுதியுள்ளேனா என்றால் எழுதியுள்ளேன். போலிசார் விசாரணையிலும், எனது உயரதிகாரிகள் விசாரணையிலும் மேற்சொன்ன தினநாட்குறிப்பை கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். போலிசார் விசாரணையிலும், எனது உயரதிகாரிகள் விசாரணையிலும் யார் என்றே தெரியாத நபர்தான் கல் எடுத்து எரிந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எதிரிகளை யார் என்றே எனக்கு தெரியாது. இந்த வழக்கில் குறிப்பிட்ட இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், வேறு எங்கோ நடந்த சம்பவத்தை வேண்டும் என்றே செக்காணூரணி காவல்நிலையம் முன்பாக நடந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No. 171/2012**
**Prosecution Witness P.W. 10**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. குமார் | Caste | : |
| Father's name | : திரு. ராமுத்தேவர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 24.03.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் மதுரை திருமங்கலம் தமிழ்நாடு அரசுப்போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 14.07.2010 அன்று TN 58 N 321 என்ற பதிவெண் கொண்ட பேருந்தை நான் திருமங்கலத்தில் இருந்து பெரியார் செல்வதற்கு நான் டிரிப் எடுத்த போது செக்காணூரணி அருகே வடிவேல் தியேட்டர் முன்பாக கூட்டமாக நபர்கள் வந்து வண்டியின் பின்பக்க வலது பக்க கண்ணாடியை உடைத்துவிட்டார்கள். பயணிகளுக்கும், எனக்கும் எந்த காயமும் இல்லை. எங்களுடன் வந்த பத்து வண்டிகளையும் சேதப்படுத்தினார்கள். செக் இன்ஸ்பெக்டர் அவர்கள் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை செக்காணூரணி காவல்நிலைய ஆய்வாளர் விசாரித்தார். ஆஜர் எதிரிகள் தான் வண்டியை சேதப்படுத்திய நபர்கள் என்றால் கூட்டத்தில் எனக்கு தெரியவில்லை.

**குறுக்குவிசாரணை**

எத்தனை மணிக்கு எங்கிருந்து மேற்படி பேருந்து கிளம்பியது என்றால் 9.30 மணியளவில் திருமங்கலத்தில் இருந்து செக்காணூரணி சென்று மீண்டும் பெரியார் பேருந்து நிலையம் வரை செல்லும் பேருந்து ஆகும். திருமங்கலத்தில் இருந்து எனது பேருந்து மட்டும் தான் செக்காணூரணி கிளம்பியது. நான் செக்காணூரணி சென்று அடையும் போது சுமார் 10.00 மணியில் இருந்து 10.30 மணி இருக்கும். நான் செக்காணூரணி வரும் போது சுமார் பத்து பேருந்துகள் நின்று இருந்தது, அதற்கு பின்பு தான் எனது பேருந்தும் நின்றிருந்தது. நின்று கொண்டிருந்த

பேருந்தில் தான் கல் எடுத்து எரிந்தார்கள். நான் சம்பவங்ததை நேரடியாக பார்க்கவில்லை என்றும், என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்து காவல்நிலையம் சென்றோம், காவல்நிலையத்தில் இருந்து அ.சா.1 தகவல்சொல்லி அவர் மதுரையில் இருந்து கிளம்பி சம்பவ இடத்திற்கு வந்தார். நான் செக்கிங் இன்ஸ்பெக்டருக்கு தகவல் சொன்ன நேரம் சுமார் 11.00 மணி இருக்கும். அதற்கு பின்பு தான் அ.சா.1 வந்த பின்பு அவரிடம் நான் சொல்லி விட்டு டிப்போவிற்கு சென்றுவிட்டோம். 11.30 மணியளவில் நான் பேருந்தை அ.சா.1 யிடம் காண்பித்துவிட்டு சென்றுவிட்டோம். போலிசார் விசாரணையிலும், எனது உயரதிகாரிகள் விசாரணையிலும் அடையாளம் தெரியாத நபர்கள் தான் கல் எடுத்து எரிந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததில் இருந்து இன்று வரை காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் விசாரணைக்கு கூப்பிட்டார்கள். மேற்படி எதிரிகளை யார் என்றே எனக்கு தெரியாது. இந்த வழக்கில் குறிப்பிட்ட இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், வேறு எங்கோ நடந்த சம்பவத்தை வேண்டும் என்றே செக்காணூரணி காவல்நிலையம் முன்பாக நடந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.